**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - 2020**

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரி நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம், உரிய காலப்பகுதியினுள் இனங்காணப்பட்ட அனைத்து வருமானங்கள் மற்றும் செலவினங்களின உருப்படிகள் வருமான அல்லது செலவினம உருப்படிகளினுள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்குரிய வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,790,800 கூட்டுத்தொகையான பாதுகாப்பு செலவினங்கள் ஆண்டுக்கான செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய பாதுகாப்பு செலவினத்திற்கான பெறுமதி கணக்குகளை தயாரித்து நிறைவு செய்யும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக இணங்காண முடியாத காரணத்தால் அட்டுறு செலவினமாக கணக்கு வைப்பதற்கு முடியாதிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வருடமொன்றுக்கான செலவினங்கள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துகளுக்கான பயன்படு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் நடப்பாண்டின் இறுதியில் உள்ளபடியான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த ரூபா 1,433,003,346 கிரயமான 03 வகையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதன் பிரகாரம், ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்துவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் தேறிய கொண்டுசெல்லும் பெறுமதியை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019ஆம் ஆண்டளவில் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டுள்ள ரூபா 17,934,286 பெறுமதியான கட்டிடங்கள் நடைமுறை வேலையாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால், அந்த பெறுமதியால் கட்டிடங்களின் பெறுமதி குறைவாகவும், நடைமுறை வேலைகள் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அந்த கட்டிடங்களுக்குரிய மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 896,714 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டின் போது சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சட்டரதியான உரித்துடைய 04 ஏக்கர் 2.25 பேர்ச் பரப்பளவான 05 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஊவா மாகாண அலுவலகம் மற்றும் பதுளை அலுவலகம் ஆகியவை தாபிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய மதிப்பீட்டு அறிக்கை தற்போது கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் பெறுமதியை 2021ஆம் ஆண்டின் போது கணக்கு வைப்பதற்கு தற்போது பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஏனைய காணிகளின் மதிப்பீட்டு அறிக்கைகள் 2021ஆம் ஆண்டின் போது பெற்று கணக்கு வைக்கின்றேன். | சபைக்கு சட்டரதியான உரித்துடைய சொத்துக்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் நடைமுறை வேலைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் என ரூபா 185,808,765 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நடைமுறை | சுழற்சி முறையில் காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது நிதியல்லாத ஒதுக்கங்கள் நீங்கலாக ஏனைய அனைத்து பெறுமதிகளும் கருத்திற்கொள்ளப்படுகின்றன. அதன் பிரகாரம் இந்த | ஆண்டினுள் காசாக மேற்கொள்ளப்பட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை கருத்திற்கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகளுக்காக உள்ளபடியாக ரூபா 149,929,102 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நடைமுறை வேலைகளுக்கான காசுப்பாய்ச்சலில் ரூபா 335,737,868 ஆன வேறுபாட்டினை அவதானிக்க முடிந்ததுடன், அந்த வேறுபாடானது ஆண்டிற்கான நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்திய தொகையாக தவறாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீராக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2019 செப்தம்பர் மாதத்தின் போது சுகததாச விளையாட்டரங்களில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 31ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு போட்டிகளுக்காக சுகததாச விளையாட்டரங்கினை ஒதுக்குவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,293,734 ஆன தொகை அந்த விளையாட்டு விழா இடம்பெறாத காரணத்தால் பெற வேண்டியதாக கணக்கு வைப்பதற்கு பதிலாக எவ்வித சான்றுபடுத்தலும் இல்லாது ஆண்டிற்கான செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2021ஆம் ஆண்டின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 33ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவிற்காக செலவிட உத்தேசித்து தொகையில் இதுவரை செலுத்தப்பட்டுள்ள தொகையை எதிரீடு செய்வதற்கு அல்லது, ஏதேனும் காரணத்தால் அந்த விளையாட்டு விழாவினை நடாத்த முடியாது போனால் இந்த தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அறவீடு செய்வதற்கு அல்லது எதிரீடு செய்ய எதிர்பார்க்கப்பட்டால், அந்த செலவினம் பதிவழிப்பதற்கு பதிலாக பெற வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதி | **836,790** | **79,713,942** | **78,877,152** | கணக்குகளை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இனங்காணக்கூடியதாக இருந்தது ரூபா 836,790.00 மாத்திரம் ஆகும். 2020ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்காக உரிய முறையில் குறித்த பட்டியல்களை சமர்ப்பிக்குமாறு இளைஞர் சேவைகள் கம்பனிக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகையை இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டும். |

### 1.5.5 ஒருங்கிணைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 98 சதவீத உரித்துடன், வ/ப வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி 1981ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிராததுடன், கம்பனியால் 2017ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு இதுவரையிலும் 2017ஆம் ஆண்டுக்கான கணக்குகள் மாத்திரமே தயாரிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், 2019ஆம் ஆண்டுக்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தயாரிக்கப்பட்ட நிதி அறிக்கையில் இளைஞர் சேவைகள் கம்பனியின் கணக்குகளை ஒருங்கிணைக்க முடியாதுள்ளது. எதிர்காலத்தில் இளைஞர் சேவைகள் கம்பனியின் கணக்குகளை நாளதுவரையாக உரிய கணக்குகளை தயாரித்து செல்லுமாறு முகாமைத்துவத்திற்கு அறிவுறுதப்பட்டுள்ளது. | மன்றத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் திகதியில் வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் நிதித் தகவல்களுடன் ஒருங்கிணைத்து ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ஒப்பந்த பிடிகாசுக் கணக்கினுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 921,814 ஆன மீதி மற்றும் 03 வருடங்களை விட பழமையான ரூபா 1,873,036 கூட்டுத்தொகையான பல்வேறு கடன்பட்டோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்காக நிறுவனம் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நில்வலா துருணு பூங்காவினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்கு மற்றும் வட மாகாணத்தில் புனரீன் நிர்மாணம் ஆகியவற்றுக்குரிய பிடிகாசுகளை விடுவிப்பதற்கு உரிய பணம் இல்லாதிருந்தமையால் மீதியை தீர்ப்பனவு செய்ய முடியாதிருந்தது. | நீண்ட காலமாக முன்கொண்டுவரப்படும் கடன் மீதியை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1994 யூன் 14ஆந் திகதிய 95ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியினால் திட்டவட்டமாக அங்கீகரிக்கப்படும் நலன்களை மாத்திரம் தமது கட்டுப்பாட்டுச் சபைகளின் அங்கீகாரத்துடன் தமது ஊழியர்களுக்கு செலுத்தும் இயலுமை காணப்பட்ட போதிலும், அதற்கு முரணாக விளையாட்டுச் சங்கத்தில் பணியாற்றுவதற்காக ஐந்து உத்தியோகத்தர்களுக்கு 2019 சனவரி மாதம் முதல் 2020 சனவரி மாதம் வரையிலும் ரூபா 228,900 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | விளையாட்டுச் சங்கத்தின் முன்னால் உத்தியோகத்தர்களால் இந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் கருத்திற்கொண்டு மீள் கூட்டமைத்தல் பணிகளை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் பரிந்துரை கிடைத்த பின்னர் உரிய திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 198,007,000 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 330,627,000 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 132,620,000 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு இளைஞர் அபிவிருத்தி செலவினம் மற்றும் நிலைய மற்றும் நிர்வாக செலவினம் குறைவடைந்தமை பிரதானமாக காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மதிப்பாய்வுச் சபையின் அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக 2017ஆம் ஆண்டினுள் அச்சிடப்பட்ட ரூபா 1,822,400 கிரயமான 268,000 எண்ணிக்கையான இளைஞர் தகவல் பத்திரங்களை அகற்றுமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. தேவையா உரிய முறையில் இனங்காணாது மற்றும் அரச நிதியினை சிக்கனமாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தாமை தொடர்பில் நிதிப்பிரமாணம் 156இன் பிரகாரம் உரிய பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017ஆம் ஆண்டினுள் அச்சிடப்பட்ட இளைஞர் தகவல் பத்திரங்கள் தொடர்பில் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் மேற்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளின் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 40 காணிகளின் உரித்தானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 40 காணிகளை சுவீகரிக்கும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன், அவற்றை துரிதமாக மேற்கொள்ளல் மிகவும் கடினமான விடயம் என்பதை | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | குறிப்பிடுகின்றேன். எவ்வாறான போதிலும், இந்த காணிகளை சுவீகரிப்பதற்காக அரச சட்ட திட்டங்கள் பின்றறப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |

**3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015ஆம் ஆண்டு முதல் 04 வெளிவாரி நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்த ரூபா 4,959,409 கூட்டுத்தொகையான நிதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் உரிய பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் மீதிகளாக காணப்பட்ட போதிலும், உள்ளபடியாக இந்த மீதிகள் நிலவாமையால் எதிர்காலத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கப்பட்டுள்ள நிதிகள் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 செயற்திட்ட அல்லது மூலதன வேலையிலான தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017ஆம் ஆண்டின் போது 2 நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக திட்டங்களை தயாரிப்பதற்காக ரூபா 2,613,779 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் இந்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | தேவையான நிதியேற்பாடு இதுவரையிலும் கிடைக்காமையால் நிர்மாணங்களை ஆரம்பிக்க முடியாதிருந்தது. திறைசேரியிலிருந்து நிதி கிடைத்தவுடன் இதற்காக முன்னுரிமையளித்து நிறைவேற்றுவதாக குறிப்பிடுகின்றேன். | செயற்திட்டங்களுக்காக மன்றத்திற்கு கிடைக்கு நிதியேற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்துவதற்காக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் துறைரீதியான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 84,216,614 செலவிடப்பட்டிருந்த 2 செயற்திட்டங்கள் ஒப்பந்ததாரரால் பணிகள் தாமதமடைந்தமையின் காரணத்தால் 2018 ஆகஸ்ட் மாதமளவில் பணிகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை | துறைரீதியான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் எஞ்சிய பணம் கிடைக்காமையால் லவ்லேன் மற்றும் தம்புள்ளை பயிற்சி நிலையங்களை நிர்மாணிக்கும் எஞ்சிய பகுதியை ஆரம்பிக்க முடியாதிருந்தது. எதிர்காலத்தில் இதற்காக முன்னுரிமையளித்து பணிகளை | உரிய மேற்பார்வையுடன் தாமதமின்றி செயற்திட்டங்களை நிறைவு செய்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருந்ததுடன், அந்த நிர்மாணங்களின் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுவதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு உள்ள 06 நிர்மாண செயற்திட்டங்களுக்காக ரூபா 372.75 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பணிகளை நிறைவேற்றவேண்டிய காலம் நிறைவடைந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், இந்த செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 13 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இவை 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் ஆகும். இந்த செயற்திட்டங்களில் 2018 செப்தம்பர் முதல் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்காக பணம் செலுத்த முடியாமை மற்றும் Covid 19 வைரஸ் நிலைமை காரணமாக ஏற்பட்ட தடைகள் காரணமாக உரிய செயன்முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. சிலாபம் பயிற்சி நிலையத்தின் மீளமைத்தல் ஒப்பந்தத்திற்கு உரிய ரூபா 20.95 மில்லியனான தொகையை செலுத்துவதற்கு இயலாமை தொடர்பில் இந்த ஒப்பந் உடன்படிக்கையின் பிரகாரம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆரம்பித்தமைக்கான நோக்கங்கள் நிறைவேறும் வகையில் திட்டங்களை தயாரித்து உரிய மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறே உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தினுள் செயற்திட்டத்தை நிறைவு செய்தல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற 16 நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய அளவிடைப்பத்திரத்தின் கொடுப்பனவு நடைமுறைப்பமைய “உரிய ஆவணங்களை கையளித்த பின்னர் அந்த காப்புறுதி மற்றும் காப்பீடு மற்றும் பிணைமுறியை பெற்றுக்கொள்ள மேற்கொள்ளப்படும் உள்ளபடியான கிரயத்தின் 5 சதவீதமான | அனைத்து நிர்மாண செயற்திட்டங்களுக்கும் உரிய ஒப்பந்த உடன்படிக்கைகளின் ஊடாக இரு தரப்பினரும் கைச்சாத்திட்ட உருப்படிகளுக்குரிய விலைகள் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளன. கொடுப்பனவு நடைமுறையின் சரியானதன்மையை மேலும் உறுதிப்படுத்துவதற்காக 2021/03/29ஆந் திகதி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. | அளவிடைப்பத்திரத்தின் கொடுப்பனவு நடைமுறைப்பமைய கொடுப்பவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியை சேர்த்து கொடுப்பனவு மேற்கொள்ளல்” என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதனைக் கருத்திற்கொள்ளாது ஒப்பந்ததாரரின் ஊழியர்களுக்காக நட்டஈட்டுக் காப்புறுதிக்காக ரூபா 1,147,245 கூட்டுத்தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்ததாரரின் விலைக்கேள்வியின் பெறுமதியின் அடிப்படையில் ரூபா 4,253,750 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ரூபா 62,942,058 கிரயம் செலவில் (இறுதிக் கொடுப்பனவு நீங்கலாக) நிர்மாணிக்கப்பட்ட மஹரகம இளைஞர் சேவைகள் நிலையத்தின் நீச்சல் குளத்திற்குரிய முதலாவதாக தெரிவு செய்யப்பட்ட மதியுரை நிறுவனத்தினால் உரிய பணி நிறைவேற்றப்படபமையால் மற்றுமொரு மதியுரை நிறுவனத்தினால் அந்த பணி நிறைவேற்றப்பட்டமையால் ரூபா 2,870,400 கூதலாக செலுத்த நேர்ந்திருந்தது. | முதலாவது மதியுரை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டம், மதிப்பீடுகள் மற்றும் விலைக்கேள்வி ஆவணங்களில் நிலவும் குறைபாடுகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டமையை ஏற்றுக்கொள்ளாமை காரணமாக மதியுரைச் சேவைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள **standard conditions of engagement part I & II – ICTAD CONSULT 01** இன் 2:10ஆம் பிரிவிற்கமைய அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் பிரிவு 2:10:5 இன் பிரகாரம் அதுவரையிலும் நிறைவேற்றப்பட்ட சேவைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டது. | நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பில் நிலவும் நிர்வாக குறைபாடுகள் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டு அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தினுள் சிவில் பொறியியலாளர் ஒருவருக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்று நிலவிய போதிலும், அதற்கு தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காது 2017 ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதியினுள் மன்றத்தினால் 20 செயற்திட்டங்களை நிர்மாணிப்பதற்காக செயற்திட்ட கண்காணிப்பு மற்றும் திட்டமிடலுக்காக மதியுரை நிறுவனங்களுக்கு ரூபா 36,182,728 கூட்டுத்தொகை செலுத்தியிருந்த போதிலும், நிர்மாணப் பணிகளை உரிய காலப்பகுதியினுள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது வெற்றிடமாகவுள்ள சிவில் பொறியியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1449 ஆன போதிலும், அத்திகதியில் உள்ளபடியாக வெற்றிடமாக காணப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 294 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் 35 பதவிநிலைத் தரத்திற்கான பதவிகள் 03 வருடங்களுக்கு மேற்பட் காலமாக வெற்றிடமாக காணப்பட்டன. | முகாமைத்துவத்தினால் கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் செயற்பட வேண்டியதுடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தமது விடயப்பரப்பிற்கு தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு 2021ஆம் ஆண்டுக்கான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட வாறு உள்ளது. | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் 14ஆந் திகதிய **NP/SP/SDG/17** ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |